**அ.வ.எண். 11/2023**
**வா.சா.1 : ஜோதிமணி**
**தேதி : 03.03.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

எனது தாத்தா பெயர் கருப்பண்ணகவுண்டர். கருப்பண்ணகவுண்டரின் உடன்பிறந்த சகோதரர் பெயர் பெரியண்ணகவுண்டர். உங்கள் தாத்தாவின் அம்மா பெயர் ராக்காயி என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தாத்தாவின் தகப்பனார் பெயர் முத்துக்கவுண்டர் என்று சொன்னால் சரிதான் அவருடைய மனைவி பெயர் தெரியாது. கருப்பண்ணகவுண்டரின் மற்றொரு வழக்காறு பெயர் ஐயர்மலைவீடு என்று சொன்னால் சரிதான். ஐயர்மலைவீடு என்று பெயர் வந்ததற்கு காரணம் எனது தாத்தா பெட்டவாயத்தலையிலிருந்து டயர் வண்டி மூலம் வெல்லம் வியாபாரம் செய்து வந்ததால் தான் என்று சொன்னால் தோட்டத்தில் விளையும் கரும்பை கொண்டு சென்று விற்பனை செய்வார். வெல்லம் வியாபாரம் செய்யவில்லை. உங்கள் தாத்தா பெட்டவாயத்தலை சுற்றுப்பகுதியில் வெல்லம் வியாபாரம் செய்து வந்ததால் தான் அவருக்கு ஐயர்மலைவீடு என்று பெயர் வந்து என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனார் தண்ணீர் வியாபாரம் டிராக்டரில் செய்து வந்தார் என்று சொன்னால் விவசாய நிலத்திலிருந்த தண்ணீர் எடுத்து விற்று வந்தார். உங்கள் தாத்தா கரும்பு வியாபாரம் செய்து வந்தார் என்று சொல்வது பொய் என்றும் வெல்லம் வியாபாரம் செய்யவில்லை என்றும் வெல்ல வியாபாரம் செய்து வந்தார் என்று சொ்னனால் உங்கள் வழக்கிற்கு பாதகமாகும் என்பதால் தான் வெல்லம்

வியாபாரம் செய்யவில்லை என்று சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் சகோதரர் பூபதி தண்ணீர் வியாபாரம் செய்து வந்தார் என்று சொன்னால் தோட்டத்திலிருந்து தண்ணீரை எடுத்து வியாபார் செய்தார் அவர் பூர்வீக சொத்தில் விவசாயமும் செய்தார். நான் பி.ஏ. படித்துள்ளேன். எனது சகோதரி பி.காம் படித்துள்ளார். 2ம் வாதி சுதா அரசு பணியில் வேலை செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். 2ம் வாதி சுதாவிற்கும் அவரது கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு உங்கள் வீட்டில் தான் இருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல தனியாகத்தான் இருந்து வந்தார். 2ம் வாதியின் கணவருக்கும் 2ம் வாதிக்கும் மனவருத்தம் இருந்து வந்தது. நீங்கள் உங்கள் தாத்தா கருப்பண்ண கவுண்டரின் மகளின் மகனைத்தான் திருமணம் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். உங்கள் தாயாரும், தகப்பனாரும் தனித்தனியாக பிரிந்து வாழ்ந்த வருகிறார்கள் என்று சொன்னால் 7, 8 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். உங்கள் தகப்பனாருக்கு ரத்த சர்க்கரை மற்றும் ரத்த அழுத்தம் காரணமாக காலில் கட்டை விரல் எடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. கொரானா காலக்கட்டத்தில் உங்கள் தாயாருக்கு கொரானா தொற்று ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். உங்கள் தாயாருக்கு கொரானா தொற்று இருந்து வந்ததை உங்கள் சகோதரர் பார்த்து வந்ததால் தான் அவருக்கும் கொரானா தொற்று ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் சகோதரர் பூபதிக்கு கரூர் அரசு மருத்துவமனையில் கொரானா தொற்று இல்லை என்று வந்தது. ஈரோடு தன்வந்திரி மருத்துவமனையில் தான் கொரானா தொற்று உள்ளது

என்று வந்தது. உங்கள் சகோதரர் பூபதி கொரானா தொற்றினால் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல அவருக்கு தோட்டத்தில் வேலை செய்யும்போது விஷக்கடி ஏற்பட்டதால் தான் இறந்துவிட்டார். உங்கள் தகப்பனாருக்கு ரத்த அழுத்தமும், நீரிழிவு நோய் இருப்பதால் 2ம் பிரதிவாதியின் பராமரிப்பில் தான் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனாருக்கு ரத்த அழுத்தமும், நீரிழிவு நோய் மருத்துவமனைக்கு பெருமளவில் செய்து வருகிறார் என்று சொன்னால் தெரியாது. உங்கள் தாயார் உங்கள் தகப்பனாருக்கு எதிராக மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன மனுவின் அடிப்படையில் உங்கள் தகப்பனார் உங்கள் தாயாருக்கு பணம் அனுப்பி வருகிறார் என்று சொன்னால் மாதம் ரூ.5000/- அனுப்பி வருகிறார். உங்கள் சகோதரர் பூபதி 2 கை குழந்தைகளை விட்டு விட்டு இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். அந்த 2 குழந்தைகளையும் உங்கள் தகப்பனார் தான் படிக்க வைத்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். உங்கள் குடும்பம் பொதுமக்கள் மத்தியில் மதிப்புடைய குடும்பம் என்றால் சரிதான். உங்களுக்கு நல்ல சீர்சிறப்பு செய்து திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு திருமணம் பழனி மலையில் நடைபெற்றது வரவேற்பு எதுவும் நடக்கவில்லை. 2ம் வாதி சுதாவிற்கு கோவை ரோட்டில் உள்ள கொங்கு மன்றத்தில் திருமணம் நடைபெற்றது. 2ம் வாதிக்கு நல்ல சீர் சிறப்புகள் செய்து திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். **என்னிடம் காட்டப்படும் பத்திரிக்கை 2ம் வாதி சுதாவின் திருமண பத்திரிக்கை. அது**

**பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** உங்கள் தந்தை இன்று வரை விவசாயம் பார்க்காமல் வீட்டில் தான் இருந்து வருகிறார் என்று சொன்னால் விவசாயம் பார்த்து வருகிறார். உங்கள் மகள், 2ம் வாதி சுதாவின் மகனும் வேலைக்கு சென்று வருகிறார்கள் என்றால் என் மகள் மட்டும் வேலைக்கு சென்று வருகிறார். உங்கள் கட்சிப்படி சில சொத்துக்கள் வழக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரிதான் அதற்குரிய முழுவிவரம் எனக்கு கிடைக்கப்படவில்லை. உங்கள் தாத்தா கருப்பண்ணகவுண்டர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து உங்கள் தகப்பனாருக்கு உயில் எழுதிக்கொடுத்தள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த சொத்தை உயிலின் படி எனது தந்தை அனுபவிக்க எனக்கு எந்த ஆட்சேபனை இல்லை. தாவா பி செட்யூல் சொத்துக்கள் உங்கள் தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான் அந்த சொத்துக்களை எங்கள் தகப்பனார் நிலங்களை விற்று அவைகளை விற்கும்போது எங்களிடம் கையொப்பம் பெற்று அதிலிருந்து வந்த வருமானத்தை வைத்துதான் பி செட்யூல் சொத்தை வாங்கினார். உங்களுக்கும், உங்கள் தகப்பனார், உங்கள் சகோதரருக்கு இறக்கும் வரை எந்த சண்டை சச்சரவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல பூபதிக்கு திருமணம் ஆன வருடத்திலிருந்து சண்டை சச்சரவு இருந்தது. பூபதிக்கு 2010 ஆண்டு திருமணம் நடைபெற்றது. பஞ்சாயத்து பேசி உங்களுக்கு ஒரு மனையும், 2ம் வாதிக்கு ஒரு மனையும் உங்கள் தந்தை கொடுத்தார் என்றால் மனை கொடுத்தார் எங்களிடமிருந்து பவர் எழுதி வாங்குவதற்காக அந்த மனைகளை எங்களுக்கு

எழுதிக்கொடுத்தார். அந்த ஆவணங்கள் வா.சா.ஆ.12, வா.சா.ஆ.13 என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன வா.சா.ஆ.12, 13 ஆவணங்களில் உள்ள வழக்கில் தாவா சொத்தாக காண்பிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் தகப்பனார் உங்கள் தாயார் பெயரில் ஒரு வீடு ஒன்றை கிரையம் வாங்கிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது என் பெயரில் உள்ளதா என்று என் தாயாருக்கே தெரியாது. உங்கள் தாயார் உங்கள் சகோதரருக்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.17, வா.சா.ஆ.18 ஆவணங்களில் உள்ள சொத்துக்களை தாவா சொத்துக்களில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். **என்னிம் காட்டப்படும் சர்வே எண்.1491/பி வரைபடம் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டதற்குரிய வரைபடம் இதுதான் என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பி.வா.சா.ஆ.2– ல் 1, 2 மனைகள் உள்ள கீழ்புறப்பகுதிதான் உங்கள் தாயார் உங்கள் சகோதரர் பூபதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். **என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் தாயார் என் சகோதரருக்கு எழுதி வைத்த ஆவணம் என்று சொன்னால் சரிதான். அது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பி.வா.சா.ஆ.3 ல் கண்டுள்ள சொத்தில் வீடுகளும் அந்த சொத்தின் மேல்புறத்தில் உள்ள இடத்தில் உங்கள் தகப்பனாருக்கு வீடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். உங்களுக்கும் பிரதிவாதிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் உங்களுக்குள் பஞ்சாயத்து பேசி நீங்கள் கேட்டுக்கொண்டபடி

20.07.2011 ஆம் தேதி உங்களுக்கும் 2ம் வாதிக்கும் தனித்தனியாக கிரையம் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு தாவா சொத்துக்களில் எந்த பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் உங்கள் தகப்பனார் மட்டும் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனாருக்கு நீங்கள், 2ம்வாதி, 5ம் வாதி ஆகியோர் பல மனஉலைச்சலுக்கு ஏற்படுத்தி வழக்கு போன்றவைகளை ஏற்படுத்தியால் அவர் தனது இறுதி காலத்தில் யார் சொத்தை அடைய வேண்டும் என்று 3, 4 பிரதிவாதிகளுக்கும் பூபதியின் குழந்தைகளுக்கும் உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் எழுதிவைத்துள்ளார் அதில் எங்கள் சொத்தையும் சேர்த்து எழுதிவைத்துள்ளார். உங்கள் மாமியார் அம்மையக்காளின் சகோதரி உங்கள் தகப்பனாருக்கு எதிராகவும் தாத்தாவிற்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் சரிதான். அந்தவழக்கில் கூட்டுக்குடும்ப சொத்து என்று தான் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த சொத்து கூட்டுக்குடும்ப சொத்து அல்ல என்றும் அதனால் பாகம் கொடுக்க வேண்டியதல்ல என்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனாருக்கு தற்போது தாவா சொத்திலிருந்து வரக்கூடிய வருமானம் மட்டும் தான் வேறு எந்த வருமானமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் முன்பிருந்தே சாயப்பட்டறை கழிவுகளால் தண்ணீர் பாதிக்கப்பட்டு விவசாயம் செய்ய முடியாத நிலை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா பி செட்யூல் சொத்து உங்கள் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்து

என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனார் உங்கள் தாயாருக்கு கொரானா பாதிப்பு ஏற்பட்டபோதும் உங்கள் சகோதரருக்கு கொரானா பாதிப்பு ஏற்பட்டபோதும் நிறைய செலவு செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல அந்த செலவுகளை என் தம்பியின் மனைவியும், 2ம் வாதியும் தான் செய்தார்கள். தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்து, பூர்வீக சொத்து என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. 6 முதல் 24 பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாடகைக்கு குடியிருப்பதிலிருநது காலி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் வழக்கில் சேர்த்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சென்று அவர்களை மிரட்டியதால் அவர்களில் சிலர் காலி செய்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனார் வங்கியில் கடன் பெற்றும், வெளி நபர்களிடம் கடன் பெற்று வீடுகளை கட்டினார் என்று சொன்னால் சரியல்ல பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் வீடுகள் கட்டினார்.

<u>**2, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

மேற்படி குறுக்கு விசாரணையை தனது தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார். ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.03 19:17:19 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.